# வணங்கப்படுவதில் இருந்து தூஷிக்கப் படுதலுக்கு (14:6-20)

*ஊழியக்காரரான ஒரு நண்பர் தாம் முதல் முதல் பிரசங் கித்த இடத்தில் இருந்த மக்கள் தம்மை நடத்திய விதத்தைக் குறித்துப் பின்வருமாறு விளக்கினார்: "முதலாம் ஆண்டிலே அவர்கள் என்னை தெய்வமாக வணங்கினார்கள். இரண்டாம் ஆண்டிலே அவர்கள் என்னைத் தள்ளி வைத்து ஏங்கச் செய்தார்கள். மூன்றாம் ஆண்டிலோ அவர்கள் என்னைத் தூளாக அரைத்துப் போட்டார்கள்." சில ஆண்டுகளிலேயே அவர் ஒரு எல்லையில் இருந்து மறு எல்லைக்குச் சென்று விட்டார், ஆனால் அப்போஸ்தலராகிய பவுலோ தெய்வமாக வணங்கப்படுவதில் இருந்து சில மணி நேரத்திலேயே தூளாக அரைத்துப் போடப்படுவதற்கு சென்று விட்டார்!*

*அப். 14ம் அதிகாரத்தில், பவுலின் முதல் நற்செய்திப் பிரயாணத்தில் பவுலும் பர்னபாவும் கலாத்தியாவின் பகுதியில் ஊழியம் செய்து கொண்டிருப்பதைப் பற்றி நாம் படித்துக் கொண்டிருக்கின்றோம். அப். 13:42-14:7 பற்றிய நமது முந்திய பாடத்தின் முடிவில், யூதர்களும், இக்கோனியா பட்டணத்தின் உள்ளூர் அதிகாரிகளும் சேர்ந்து, பவுலையும் பர்னபாவையும் கல்லெறியத் திட்டமிட்டார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றித் தெரிய வந்தபோது ஊழியக்காரர்கள், "லிக்கவோனியா நாட்டி லுள்ள பட்டணங்களாகிய லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும் அவைகளின் சுற்றுப்புறங்களுக்கும் ஓடிப் போனார்கள்" (வ. 6). கலாத்தியா நாடானது பம்பிலியா, பிசீதியா மற்றும் லிக்கவோ னியா என்ற மூன்று துணை மாகாணங்களைக் கொண்டி ருந்தது. பவுலும் பர்னபாவும் முன்பு பிரசங்கித்திருந்த இரண்டு இடங்களும் பிசீதியாவில் இருந்தன. (இக்கோனியா*

பிசீதியாவில் இருந்தது; அந்தியோகியா பிசீதியாவின் எல்லைக்கருகில் இருந்தது.) இப்பொழுது அவர்கள் தெற்கு முகமாய் லிக்கவோனியா மாகாணத்திற்குச் சென்றார்கள். "லிக்கவோனியா" என்பதன் சாதாரண மொழிபெயர்ப்பு "ஓநாய் நாடு" என்பதாகும். நாகரீகச் சூழ்நிலையிலிருந்து தொலைவில் இன்னும் வெகு தொலைவில் இரண்டு ஊழியர் களும் சென்று கொண்டிருந்தார்கள்.

பவுலும் பர்னபாவும் முதலில் லீஸ்திராவுக்குச் சென்றார் கள் (வரைபடத்தைப் பார்க்கவும்). இது இக்கோனியாவி லிருந்து தெற்கில் தென்மேற்கில் பதினெட்டு அல்லது இருபது மைல்கள் தூரத்தில் இருந்தது. உள்ளூரில் இருந்த யுத்த குணமுள்ள மக்களுக்கு எதிராகத் தற்காப்பதற்கு ரோமா புரியின் குடியேற்றப் பகுதி ஒன்று அங்கிருந்ததால் லீஸ்திரா ஒரு குறிப்பிடத் தக்க கிராமமாய் இருந்தது.

பவுல் தமது ஊழியப் பணியில், லீஸ்திராவில் பெற்ற அனு பவமே மிகவும் துன்பகரமானதாக இருந்தது. பவுல், தீமோத்தே யுவுக்கு (இவர் லீஸ்திராவைச் சேர்ந்தவர் [16:1, 2]) எழுதும்போது, "அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும்" (2 தீமோ. 3:11) என்று கூறினார். கொரிந் தியருக்கு எழுதுகையில் அவர், தாம் ஒரு தரம் கல்லெறியுண்ட தாகக் குறிப்பிட்டார் (2 கொரி. 11:23-26); அந்த ஒருதரம் மற்றும் ஒரே ஒருதரம் கல்லெறியப்பட்டது லீஸ்திராவில்தான். பின்னாளில், கலாத்தியாவிலிருந்த சகோதரர்களுக்கு எழுதும் போது பவுல், "... கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடை யாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக் கிறேன்" (கலா. 6:17) என்று கூறினார். இந்த "அச்சடையாளங் களில்", லீஸ்திராவில் அவர் மேல் எறியப்பட்ட கூர்கற்களால் உண்டான பயங்கரத் தழும்புகளும் உள்ளடங்கியிருக்கலாம்.

இந்தப் பாடத்தில், பவுல் எவ்விதம் வணங்கப்பட்ட திலிருந்து வதைக்கப்பட்டதற்குக் கடந்து சென்றார் என்பதை யும், அதை அவர் எவ்விதம் கையாண்டார் என்பதையும் நாம் காண்போம். இந்தக் கட்டுரையை நான் தயாரிக்கையில், இதற்கும் நமது சொந்த வாழ்க்கைக்கும் இணைகளை வரைவது எவ்விதம் என்று நான் இடர்ப்பாடு அடைந்தேன், ஏனென்றால் லீஸ்திராவில் பவுல் பெற்ற மிதமிஞ்சிய அனுபவத்தை நம்மில்

மிகச் சிலரே பெற்றிருப்போம். அநேக மாறு ஒப்பீடுகள் என் மனதில் வந்தன: ஜெயமும் அபஜெயமும், வெற்றியும் தோல்வியும், ஏற்றுக்கொள்ளப்படுதலும் புறக்கணிக்கப்படுதலும், நிறைவாக நான் "வணங்கப்படுதல்" மற்றும் "வதைக்கப்படுதல்" என்ற சொற்றொடர்களைத் தேர்ந்தெடுத்தேன் - இவை மிகச் சரியான இணைவுகளாயில்லையென்றாலும், நமது சொந்த வாழ்க்கையில் நாம் சந்திக்கும் இரண்டு கடையெல்லைகளுக்கும் நடைமுறைச் செயல்பாட்டை கொண்டு வரப் போதிய அளவு நெருக்கமான அர்த்தமுள்ளவைகளாயிருக்கும் என்று முடிவு செய்தேன்.

## நிறைவேற்றியவைகள் (14:6, 7)

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக அந்தியோகியாவை விட்டு ஓடிய பவுலும் பர்னபாவும் தங்கள் உயிரைக் காத்துக் கொள்வதற்காக இக்கோனியத்தை விட்டும் தப்பியோடினார்கள். அவர்கள் தேவனால் தரப்பட்டிருந்த பணியிலிருந்து பின்வாங்கவில்லை. அவர்கள் லீஸ்திராவை அடைந்தபோது (வ. 6) "அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினார்கள்" (வ. 7).

லீஸ்திராவில் ஜெப ஆலயம் இருந்ததாக நாம் படிப்பதில்லை. அங்கு ஒரு சில யூதர்கள் வாழ்ந்து வந்தார்கள் (16:1, 2; 2 தீமோ. 1:5), ஆனால் ஒரு ஜெப ஆலயத்தை நிலைநாட்டப் போதுமான எண்ணிக்கையான 10 பேர் அங்கில்லை. பவுலும் பர்னபாவும் (தங்கள் வழக்கத்தின்படி) முதலாவது ஜெப ஆலயத்திற்குப் போக முடியாதிருந்ததால் திறந்த வெளியில் பிரசங்கம் செய்தார்கள் என்பது தெளிவு. இது பட்டணத்தின் வாசல்களுக்குள் இருந்த பெரிய பகுதியாக (அநேக பட்டணங்களில் இப்படி ஒரு இடம் இருப்பது வழக்கமாகும்) இருந்திருக்கலாம்.

இவ்விரண்டு மனிதர்களும் இயேசுவை அறிவிக்கையில், தேவன் அவர்களது முயற்சிகளை ஆசீர்வதித்தார். பிற்பகுதியில் நாம் லீஸ்திராவில் "சீஷர்கள்" பற்றியும் (14:20) - இன்னும் பிற்பகுதியில் அங்கு கர்த்தருடைய சபையானது நிலைநாட்டப்பட்டது பற்றியும் (14:21, 23) படிக்கவிருக்கின்றோம்.

விரைவில் நாம் லீஸ்திராவில் மக்கள் கூட்டமானது

எவ்விதம் பவுலையும் பர்னபாவையும் வணங்கியது என்றும், பிறகு அவர்களைக் கொலை செய்ய முயன்றது என்பது பற்றியும் காணவிருப்பதால், பின்வரும் உண்மைகளை நாம் நிலைநாட்ட வேண்டியுள்ளது: ஒரு மனிதர், தம்மை உலகம் நடத்தும் விதம் எப்படியிருந்தாலும், அவர் தேவனுடைய சித்தத்தைச் செய்தால், வெற்றியாளராயிருக்கின்றார்! இதற்கு மாறாக, ஒரு மனிதரை இவ்வுலகமானது அதிகம் கனப்படுத்தினாலும், அவருடைய இருதயமானது தேவனை மையமாகக் கொண்டிராவிட்டால், அவர் இழிவான தோல்வியாளரா யிருக்கின்றார்! பவுலும் பர்னபாவும் தங்களுக்கு என்ன நடந்தாலும், தேவன் தங்களுக்கு கொடுத்திருந்த ஊழியத்தை நிறைவேற்றத் தீர்மானம் செய்தார்கள்!

## வணங்கப்படுதல் (14:8-18)

ஒரு நாள் லீஸ்திராவிலே பவுல் இயேசுவைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கையில், "ஒருவன் ... பவுல் பேசுகிறதைக் கேட்டுக் கொண்டிருந்தான்" (வ. 8, 9). 9-ம் வசனத்தில் உள்ள பேசினார் என்ற கிரேக்க வார்த்தை எப்பொழுதுமே சாதாரணமாகப் பேசுவதைக் குறிக்கிறது, பிரசங்கித்தலை அல்ல. இந்த மனிதர், "தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியா யிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் விழங்காதவனாய் உட்கார்ந்து" (வ. 8) என்று மருத்துவர் லூக்காவினால் சித்தரிக்கப்படுகின்றார். அதிகாரம் 3ல் பேதுருவினால் குணமாக்கப்பட்ட சப்பாணியான பிச்சைக்காரனைப் பற்றிய நினைவு நமக்கு வருகின்றது.[1] லீஸ்திராவில் இருந்த இம்மனிதன் பிச்சைக்காரனா, அல்லவா என்று நமக்குக் கூறப்படவில்லை. ஒருவேளை இவன் அப்படியிருந்திருக்கலாம்.

இந்த மனிதன் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந் ததைப் பவுல் கவனித்தார். பவுல் திரும்பி "அவனை உற்று நோக்கி", "இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண் டென்று" கண்டார்[2] (வ. 9). அப். 3ல் வந்த சப்பாணிக்கும், இந்த மனிதனுக்கும் இடையில் இவ்விடத்தில் குறிப்பிடத் தக்க வேறுபாடு ஒன்று உள்ளது. அப். 3ல் வந்த சப்பாணி மனிதரிடம் குணமடையுமுன் இயேசுவினிடத்தில் விசுவாசம் இருந்ததாக அறிகுறி எதுவும் இல்லை (அவன் விசுவாசமின்மைக்கு

அறிகுறியெல்லாம் இருந்தது; "அப். நட. 1" பாகத்தில் "குண மாக்கும் ஒரு நிகழ்ச்சி" என்ற கட்டுரையில் அப். 3:3-5க்கான குறிப்புகளைக் காணவும்), ஆனால் இம்மனிதன் "குணமாக வேண்டிய விசுவாசம் உள்ளவனாய்" இருந்தான். சிலவேளை களில், அற்புதங்களைப் பெற்றுக் கொள்பவரிடத்தில் விசுவாசம் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது, சில வேளைகளில் இப்படிக் குறிப்பிடப்படுவதில்லை. அற்புதம் செய்கின்றவர் எப்பொழுதுமே விசுவாசமுள்ளவராய் இருக்க வேண்டியதா யிருந்தது (மத். 17:19, 20; மாற். 16:14, 17); அற்புதத்தைப் பெற்றுக் கொள்கின்றவருக்கு இது அவசியம் இல்லை. இது பற்றி J.W. மெக்கார்வி அவர்கள் "அம்மனிதனின் விசுவாசத் தினாலேயே பவுல் அவனை முழுமையாகக் குணமாக்க முடிந்தது என்பதற்கு வேதவசனங்களில் உடன்பாடான கருத்து எதுவும் இல்லை" என்று சரியாகவே கூறினார்.

இம்மனிதன் விசுவாசத்தை எங்கிருந்து பெற்றான்? நாம் அனைவரும் பெற்ற அதே இடத்திலிருந்துதான்: தேவனுடைய வசனத்திலிருந்து தான் (14:9; ரோமர் 10:17). ஒருவேளை, பவுல் கிறிஸ்துவைப் பற்றிக் கூறியபோது, இயேசு குணமாக்கிய நிகழ்ச்சிகள் பற்றிக் கூறியிருக்கலாம் (10:38). ஒருவேளை பவுல் தம்மைக் கொண்டு இயேசு குணப்படுத்தியது பற்றிக் கூட கூறியிருக்கலாம் (14:3).

சப்பாணியின் விசுவாசம் பற்றிய கருத்தின் பாடத்தைக் கடந்து செல்லு முன்பு இவ்விடத்தில் நாம் "இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்குண்டு" என்ற வார்த்தையில் கிரேக்க மொழியின் நேரடி அர்த்தம் உள்ளதென்பதைக் குறிப்பிட வேண்டும். சந்தர்ப்பப் பொருளின் அடிப்படையில், அநேக மொழிபெயர்ப்பாளர்கள் இவ்விடத்தில் *சரீரப்பிரகாரமான* "இரட்சிப்பு" என்று அர்த்தப்படுவதாக யூகிக்கின்றார்கள்; ஆகையால், அவர்கள் "இரட்சிப்பு" என்ற வார்த்தையை "குணமாக்குதல்" என்று மொழிபெயர்க்கின்றார்கள். இருப் பினும், இம்மனிதன் இயேசுவை விசுவாசித்தான் என்பதை - இவன் *ஆவிக்குரிய* இரட்சிப்பின் விசுவாசம் கொண்டிருந்தான் என்பதை - கண்ணுற்ற பவுல், இயேசு சரீரத்திலும், ஆவியிலும் குணம் கொடுக்க முடியும் ("அப். நட. 1" பாகத்தில் "அவருடைய நாமத்தினாலே" என்ற கட்டுரையில் அப். 4:10, 12 க்கான குறிப்புகளைக் காணவும்) என்பதை விளக்கப்படுத்து

வதற்காக இவனைக் குணமாக்கினார்.

பவுலினால் அற்புத குணம் கொடுக்கப்பட்டதாகப் பதிவாகியுள்ள முதல் நிகழ்ச்சி இதுவேயாகும், ஆனால் இது அவர் செய்த முதலாவது அற்புதமல்ல என்பது தெளிவு. அவர் ஒரு அப்போஸ்தலராயிருந்தார், "அப்போஸ்தலருக்குரிய அடையாளங்களை" (2 கொரி. 12:12) அவரால் நடப்பிக்க முடிந்தது. அவர் மந்திரவாதியின்மேல் சாபம் கூறியதைக் கண்டோம் (13:11). இக்கோனியாவில் கர்த்தர், "தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார்" (14:3). ஆகையால் பவுல் இச்சூழ்நிலையை, அனுபவமிக்கவராகவே அணுகினார். அவர் கூட்டத்தின் கவனத்தைக் கவருவதற்காக "உரத்த சத்தத்தோடே" பேசினார் (வ. 10அ). அந்த அற்புதமானது வசனத்தை உறுதிப்படுத்துதல் என்ற விரும்பத்தக்க விளைவைக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

சப்பாணியாயிருந்த அம்மனிதரிடம் பவுல், "நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்" (வ. 10ஆ) என்று கூறினார். பிச்சைக்காரனிடம் பேதுரு, "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்று கூறியபோது, அவர் விசுவாசமற்ற மனிதனைத் தமது வலது கையினால் பிடித்துத் தூக்கி விட்டார் (3:6, 7). லீஸ்திராவில் பவுல், விசுவாசத்தினால் நிறைந்த இம்மனிதரைத் தொட்டு தூக்கி விடவில்லை. அம்மனிதன் தனது விசுவாசத்தினாலே "உடனே குதித்தெழுந்து நடந்தான்" (14:10இ).

பவுல் தாமும், பர்னபாவும் தேவனுடைய செய்தியாளர்கள் என்பதை மக்கள் நம்புவதற்காக அற்புதங்களைச் செய்தார். அதற்கு மாறாக இந்த அற்புதங்களினால், அக்கூட்டத்தார் அவர்களையே (பவுல் மற்றும் பர்னபாவையே) தெய்வங்கள் என்று நம்பினார்கள். "பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு", (வ. 11அ) கிளர்ச்சியடைந்து, தங்கள் சொந்த மொழியில் சத்தமிட்டார்கள். " 'தேவர்கள் மனுஷ ரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள்,' என்று லிக்கோவோனியா பாஷைகளிலே சத்தமிட்டுச் சொல்லி, பர்னபாவை யூப்பித்தர் என்று (ஜீயஸ்)"[3] (வ. 11ஆ, 12அ) சொன்னார்கள். கிரேக்கப் புராணத்திலே யூப்பித்தர் (ஜீயஸ்) என்பது பிரதான

தெய்வமாகும். பர்னபாவை யூப்பித்தர் என்று அழைத்த உண்மையானது, தோற்றத்தில் அவர் பவுலைக் காட்டிலும் நன்றாயிருந்திருக்கலாம் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கலாம் (2 கொரி. 10:10). “பவுல் பிரசங்கத்தை நடத்தினவனான படியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள்” (வ. 12ஆ; KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புக்களில் “மெர்க் கூரி” என்றுள்ளது. இது ஹெர்மெஸின் இலத்தீன் பெயராகும்). கிரேக்கப் புராணத்தில் மெர்க்கூரி (ஹெர்மெஸ்) என்பவன் தேவர்களின்[4] செய்தியாளனாவான். பவுல் - சிறிய உருவமா யிருந்தார், பொங்கிப்பெருகும் சக்தியுடனிருந்தார், ஊக்கம் குன்றாத பேச்சாளராயிருந்தார் - இது ஒலிம்பஸ் மலையில் இருந்து வந்த செய்தியாளர் என்ற அவர்களின் கருத்துக்கு ஏற்றதாயிருந்தது.

லீஸ்திராவின் மக்கள் இந்த வியப்புக்குரிய முடிவுக்கு வந்தது ஏன் என்று நாம் புரிந்து கொள்வதற்கு, அப்பகுதியைப் பற்றி சிலவற்றை அறிந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே கூறியபடி, இவ்விரு சுவிசேஷகர்களும் வசதி மற்றும் நாகரிகம் உள்ள மக்களிடம் பிரசங்கித்துக் கொண்டிருக்கவில்லை. கல்வி யறிவற்ற, மூட நம்பிக்கையுள்ள (அப். நட. புத்தகத்தின் பிற்பகுதியில் பவுலைப் பற்றி இதே போன்ற முடிவெடுத்த மூடநம்பிக்கையுள்ள இன்னொரு கூட்டத்தாரை நாம் சந்திப்போம் [28:1-6]) ஜனங்களை லீஸ்திராவில் அவர்கள் எதிர்கொண்டார்கள். லீஸ்திராவில் வலுவாய் ஊன்றியிருந்த ஒரு நம்பிக்கையானது பழம் புராணம் ஒன்றினை மையமாகக் கொண்டதாகும்.

> ஜூபிடரும் (ஜீயஸ்) மெர்க்கூரியும் (ஹெர்மெஸ்) எப்படி மனித உருவெடுத்து பிரிகியாவின் ஒரு கிராமத்திற்கு (லீஸ்திரா பிரிகியாவில் இருந்தது. கடந்த காலங்களில் அப்பகுதி முழுவதும் பிரிகியா என்றே அழைக்கப்பட்டிருந்தது. இந்த வேளையில், லீஸ்திராவில் இருந்த மாகாணமானது கலாத்தியா என்று அறியப்பட்டது.) வந்தார்கள் என்பதைப் புராணம் விளக்கப்படுத்துகின்றது. அவர்கள் உபசரிப்பைத் தேடியலைந் தார்கள். ஆனால் எல்லா மக்களும் அவர்களைப் புறக்கணித்து விட்டார்கள். கடைசியாக பவுஸிஸ், பிலேமோன் என்ற ஏழைத் தம்பதியர் இவர்களைத் தேவர்கள் மனித உருவில் வந்தவர்கள் என்று அறியாமலேயே உபசரித்தார்கள். அவர்கள் அறியாமலேயே தேவர்களுக்கு உபசாரம் செய்தபடியால் தக்க

பலனைப் பெற்றார்கள், மற்ற ஒவ்வொருவரும் [பெரும் வெள்ளத்தினால்] அழிக்கப்பட்டனர் என்று Richard Oster என்ற விளக்கவுரையாளர் கூறுகிறார்.

லீஸ்திராவின் மக்கள் அதே தவறை இரண்டாம் முறை செய்யாதிருக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள்! இம்முறை அந்த இரண்டு தேவர்களையும் அவர்களுக்குகந்த ஆடம்பரத்தோடும், வைபவத்தோடும் ஏற்றுக் கொள்ள விரும்பினார்கள்!

ஜுப்பித்தர் (ஜீயஸ்) லீஸ்திராவின் காவல் தெய்வமானபடியினால் அவர்கள் மிகவும் கிளர்ச்சியடைந்தார்கள். அக்கொண்டாட்டத்தின் போது, அங்கிருந்த உள்ளூர் பூஜாசாரி தக்க பலிப் பொருளைக் கண்டான். பிறகு, "பட்டணத்துக்கு முன்னே இருந்த[5] யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையில்[6] கொண்டு வந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான்'' (வ. 13). பலியிடப்படும் எருதுகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன; அவைகளின் கொம்புகள் மெருகிடப்பட்டு, அவைகளின் கழுத்துக்களைச் சுற்றி[7] மலர் மாலைகள் (இம்மாலைகளும் கூட கம்பளி அல்லது மற்ற பொருட்களினால் செய்யப்பட்டிருக்கலாம்) சூட்டப் பட்டிருந்தன. அவைகள் பலியிடப் படுகையில், அவைகளின் இரத்தம் பீடத்தின் மேல் ஊற்றப்படும், பின்பு அவைகளின் மாமிசமானது சமைத்து உண்ணப்படும். மக்கள் பவுலையும் பர்னபாவையும் மரியாதைக்குரிய விருந்தினராகப் பாவித்து பெரிய விழா ஒன்றிற்குத் திட்டமிட்டார்கள்!

பவுல், பர்னபா ஆகியோருக்குப் பதிலாக நீங்களும் நானும் அங்கு நின்றிருந்தால் என்ன செய்திருப்போம்? அவர்களின் வழிபாட்டை ஏற்றுக் கொள்ளும்படி நாம் சோதிக்கப்பட்டிருப்போமா? மூட நம்பிக்கையுள்ள மக்களால், (இப்படிப்பட்ட மனிதர்களில் ஒருவனான முதலாம் ஏரோது அகிரிப்பாவைப் பற்றி நாம் 12ம் அதிகாரத்தில் படித்தோம்) "தேவர்கள்" என்று அழைக்கப்படுகையில் அதை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்ட மனிதர்கள் பலரின் கதைகள் வரலாற்றில் நிறைந்துள்ளன. இந்த ஊழியக்காரர்கள் கூட, ''நாம் இவர்களின் வழிபாட்டை ஏற்றுக் கொண்டால் இவர்கள்

சுவிசேஷத்தை மிக நன்றாய் ஏற்றுக் கொள்ளக் கூடும்” என்று சிந்தித்திருக்கலாம். மேலும் அவர்கள், “நாம் இவர்களின் உபசரிப்பை ஏற்காவிட்டால் அவர்களைக் கோபப்படுத்துவதோடு, கிறிஸ்துவுக்கு அவர்களை ஆதாயப்படுத்தும் வாய்ப்பையும் இழந்தவர்களாவோம்'' என்று கூட நினைத்திருக்கலாம்.

அவர்கள் இவ்விருவரையும் வணங்குவதை ஏற்றுக் கொள்ள இவ்விரு ஊழியர்களும் ஏதாவது சாக்குப் போக்கைத் தேடிக் கொண்டிருக்கவில்லை. மாறாக, “அப்போஸ்தலராகிய[8] பர்னபாவும் பவுலும்[9] அதைக் கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்'' (வ. 14). பவுலும் பர்னபாவும் எவ்விதம் “அதைக் கேட்டார்கள்'' என்று லூக்கா நமக்குச் சொல்லவில்லை. ஒருவேளை அவர்கள் லிக்கவோனியா மொழியைப் புரிந்து கொள்ளாதிருந்து,[10] பூஜாசாரி எருதுகளைக் கொண்டு வரும் வரையிலும் நடந்தது என்ன என்பதை அறியாமல் இருந்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் அற்புதம் செய்தபின் அவ்விடத்தை விட்டுக் கடந்து சென்றிருந்து, மக்கள் கூட்டம் மறுபடி அவர்களைக் கண்டுபிடித்துப் பலி செலுத்த ஆயத்தம் செய்தது வரை நடந்தது என்னவென்று அறியாமல் இருந்திருக்கலாம்.

இருப்பினும், பிரசங்கியார்கள் அதைக் கேள்விப்பட்டபோது, பயமடைந்து, “தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டார்கள்.” பழங்கால யூதர்கள் மத்தியில், ஒருவர் தமது வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வது என்பது துக்கத்தையும் மனக்குழப்பத்தையும் வெளிப்படுத்தும் செயலாக இருந்தது.[11] கைகள் அங்கியின் கழுத்துப் பகுதியை அழுத்திப்பிடித்து எதிர்த் திசையில் இழுத்தபோது, அங்கியானது மத்தியில் இரண்டாய்க் கிழிந்தது, மார்புப் பகுதியை வெளிக்காட்டியது. இருதயத்திலிருந்து வெளியாகும் பலத்த உணர்வுகளை வெளியே கொட்டுதலை இந்த செயலானது திருஷ்டாங்கப்படுத்துகின்றது. மெக்கார்வி பின்வருமாறு குறிப்பிட்டார்!

> ஒருவர் தமது உடையைத் திடீரென்று, வன்மையான கலக்கத்துடன் கிழித்துக் கொள்வதென்பது ... வேதாகமத்தில் ... இவ்விடத்தில்தான் கடைசியாகக் காணப்படுகின்றது. கிறிஸ்தவ விசுவாசம் போதித்து உணர்த்தும் தன்னை கட்டுப்

*படுத்தும் உணர்வானது, இப்பழக்கத்தை யூதக் கிறிஸ்தவர் களிடத்திலிருந்து மறையச் செய்தது (யோவா. 2:13 ஐக் காண்க).*

பவுலும் பர்னபாவும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்ட பிறகு, கூட்டத்திற்குள் ஓடி, பின்வருமாறு சத்தமிட் டார்கள்:

> *மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போலப் பாடுள்ள மனுஷர்தானே;[12] நீங்கள் இந்த வீணான தேவர்களை [அதாவது, விக்கிரகங்களை[13]] விட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின[14] ஜீவனுள்ள தேவனிடத்திற்குத்[15] திரும்ப வேண்டுமென்று[16] உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்[17] (வ. 15).*

அக்கூட்டத்தார் சற்று நிதானித்து யோசனை செய்யும்படி அவர்களின் வார்த்தைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. அவர்கள் உண்மையில், "உங்கள் பொய்யான தேவர்களில் ஒன்றாக வழிபடப் படுவதற்குப் பதிலாக, உங்களை அவ்வித மான - பொய்யான மற்றும் ஜீவனற்ற விக்கிரகங்களிடமிருந்து உண்மையான உயிருள்ள தேவனிடத்திற்குத் திருப்புவதற் காகவே நாங்கள் வந்திருக்கின்றோம்" என்று கூறினார்கள்!

"விக்கிரகாராதனைக் கூட்டத்தாருக்குப் பவுலின் முதல் பிரசங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று 15-17 வசனப் பகுதி அழைக்கப்படுகின்றது. பவுலும் பர்னபாவும் தங்கள் அதிர்ச்சியுடன் கூடிய மறுப்புரையை ஒரு பிரசங்கமாகக் கருதியிருப்பார்களா என்பதில் எனக்குச் சந்தேகம் உள்ளது! இருந்தாலும், இவ்வார்த்தைகளுக்கும், அத்தேனே பட்டணத்தில் இன்னொரு விக்கிரகாராதனைக் கூட்டத்திற்குக் கூறப்பட்டவைகளில் உள்ள வார்த்தை களுக்கும் இடையே ஒப்பீடுகளை நாம் காணுகின்றோம் (17:22-31). பவுலும் பர்னபாவும் அந்நிய சமயத்தாரை எவ்விதம் அணுகினார்கள் என்பதற்கான குறிப்பை நாம் இம்மூன்று வசனங்களில் காண்கின்றோம்.

ஒரு போதகர் தாம் விரும்புகின்ற இடத்தில் (நிலையில்) மக்களை இருக்கக் கண்டால் மட்டுமல்ல, மாறாக மக்கள் இருக்கும் இடத்திலிருந்தே (நிலையிலிருந்தே) போதிக்கத் தொடங்க வேண்டும். பிசீதியாவின் அந்தியோகியாவில் இருந்த

ஜெப ஆலயத்தில் பவுல் பிரசங்கித்தபோது, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை அவர் வலியுறுத்தினார் (13:16-41). லீஸ்திராவில் அவர் வேதவசனங்களை அறியாத மக்களை எதிர் கொண்டார். தேவனுடைய எழுதப்பட்ட வெளிப்பாடுகளில் தொடங்குவதற்குப் பதிலாக, தேவனுடைய இயல்பான வெளிப்பாடுகளில் அவர் தொடங்க வேண்டியதாயிற்று.[18] இதற்கு, பவுலும் பர்னபாவும் வேதவசனங்களைப் புறக்கணித் தார்கள் என்று அர்த்தமல்ல. அவர்களின் வார்த்தைகள் வேதாகம சிந்தனை மற்றும் கொள்கையில்தான் வேர் கொண்டிருந்தன.

அந்தக் கூட்டத்தார் தங்களைச் சுற்றிலும் பார்க்கக் கூடிய இயற்கையில் இருந்தே, அந்த ஊழியக்காரர்கள் தொடங்கி னார்கள் - அவைகளை உண்டாக்கினவரைப் பற்றிப் பேசினார் கள்: “வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளி லுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவன்.” பிறகு அவர்கள், “சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்க விட்டிருந்தும்” (வ. 16; மற்றும் 17:30 ஐயும் காணவும்) என்று கூறினார்கள். இதனால், தேவன் அவர்கள் விக்கிரகாராதனைக்கு வழுவிச் சென்றது உட்பட, அவர்கள் செய்த எல்லாவற்றையும் அங்கீகரித்தார் என்று அர்த்தமல்ல (ரோமர் 1:18-32). மாறாக, தேவன் இஸ்ரவேலர்களுக்குச் செய்தது போல அவர்களை வழிநடத்தி யிருந்ததில்லை என்றே அர்த்தமாகின்றது.

பிரசங்கியார்கள், “இருந்தும், அவர் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்மு டைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை என்றார்கள்” (வ. 17). புறஜாதியார் பழைய ஏற்பாட்டு வேதவசனங்களைப் பெறாமல் இருந்திருக்கலாம், ஆனால் அவர்கள் மகிழ்ச்சியுடன் அனுபவித்த ஆசீர்வாதங்கள் (வானத்திலிருந்து மழை, செழிப்புள்ள காலங்கள், ஆகாரம் உட்பட அனைத்தும்) அவர் களுடைய இருதயங்களை உண்மையான தேவனிடத்திற்குத் திருப்பியிருந்திருக்க வேண்டும் (ரோமர் 1:19, 20).

பவுல் மற்றும் பர்னபாவின் விவாதத்தைக் கூட்டத்தார் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. வசனம் 18, “இப்படி

*அவர்கள் சொல்லியும் தங்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு அவர்களை அமர்த்துகிறது அரிதாயிருந்தது" என்று கூறுகின்றது. பவுலின் சொல் திறமையானது அங்கிருந்த சிலரின் மனங்களில் அவர் தேவர்களுடைய செய்தியாளர்தான் என்று உறுதிப்படுத்தியதாகச் சிலர் யூகிக்கின்றார்கள்! இருந்தாலும், அவ்விரு மனிதர்களும் தங்களின் பலியை மறுத்தார்கள் என்பதையாவது அக்கூட்டத்தினர் புரிந்து கொண்டார்கள்.*

*விரைவில் தொடர்ந்த காட்சியைப் புரிந்து கொள்ள, உங்களை அக்கூட்டத்தில் வையுங்கள். அவர்கள் இவ்விரு அந்நியர்களின்மேல் தங்களால் முடிந்த அளவு உயர்ந்த மரியாதையைச் செலுத்த வந்தார்கள் ஆனால் அவர்கள் கவிழ்க்கப்பட்டார்கள். அநேகமாக அப்பூஜாசாரி அங்கு குழப்பமான மனநிலையுடன், அலங்கரிக்கப்பட்ட அந்த இரண்டு பெரிய எருதுகளை என்ன செய்வது என்ற வியப்புடன் நின்றிருப்பார். "தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள்" என்று சத்தமிட்டிருந்த மக்கள் விரைவாக, தலைகளைத் தொங்க விட்டுக் கொண்டு, முட்டாள்களைப் போலானோமோ என்ற உணர்வுடன் சென்றதைக் கற்பனை செய்து பாருங்கள். அந்த நாளில் பவுலும் பர்னபாவும் யாரையும் நண்பர்களாக்கிக் கொள்ளவில்லை.*

*பெரும்புகழ்ச்சி என்பது தேவனுடைய வரம் பெற்ற ஊழியக்காரர்களுக்கு சாத்தான் விரிக்கும் மிக நுட்பமான வலையாகும். ஒரு மனிதர் ஏதாவதொரு துறையில் சிறந்து விளங்கும்போது, அது போதித்தல் அல்லது பிரசங்கித்தலாக இருந்தாலும், அவரது வெற்றியானது ஒப்புக் கொள்ளப்படும்; அவர் புகழப்படுவதற்கும் வாய்ப்புண்டு. அவர் அப்புகழ்ச்சியை ஏற்றுக் கொண்டால், அவர் தம்மைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொள்வதோடு, மனிதர்களின் கவனத்தைக் கர்த்தரை விட்டுத் தம்மிடமாகத் திருப்பிக் கொள்ளுவார். இதற்கு மாறாக, புகழ்ச்சியை அவர் மறுத்தால், தம்மைப் பாராட்டுபவர்கள் பிரிந்து செல்லும் அபாயத்திற்குள்ளாகின்றார்.*

*நம்மில் எவருக்கும் பவுலின் அளவுக்குத் தாலந்துகள் இல்லை, நம்மில் யாரும் பர்னபா, யூப்பித்தர் (ஜீயஸ்) என்று அழைக்கப்படுமளவு சோதனையைப் பெறப்போவதில்லை. இருந்தாலும், நம்மில் அநேகர் சிறு சிறு வெற்றிகளைப் பெறுகின்றோம். எவ்வளவு விலை கொடுக்க நேர்ந்தாலும்,*

இவ்வெற்றிகளில் தேவனை மகிமைப்படுத்த நாம் கற்றுக் கொள்ளுவோம்.

## தூஷிக்கப்படுதல் (14:19, 20)

சற்றுப் பிறகு, "அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து" (வ. 19அ). பலி செலுத்துதலானது முழுத் தோல்வியடைந்த சற்று நேரத்தில் - அவர்கள் முகம் சிவந்து, உணர்வுகள் அடங்காத நிலையில், இன்னும் எழுச்சியுடன் இருக்கையில் - யூதர்கள் வந்திருப்பார்கள் என்பது எனது யூகமாகும். யூதர்கள் பவுலையும் பர்னபாவையும் அந்தியோகியாவை விட்டுத் துரத்தியிருந்தார்கள் என்பதையும், யூதர்கள் இக்கோனியாவில் அவர்களைக் கல்லெறியத் திட்டமிட்டார்கள் என்பதையும் நினைவில் வையுங்கள். இப்பொழுது அந்த யூதர்கள் அந்த இரண்டு பிரசங்கியார்களுக்கும் தொல்லை கொடுப்பதற்காகவே லீஸ்திராவுக்கு வந்தார்கள்.[19] (அந்தியோகியாவிலிருந்து வந்தவர்கள் நூற்றுக்கு மேற்பட்ட மைல்கள் பயணம் செய்து வந்திருந்தனர்!) வேட்டைக்காரனாக இருந்த சவுல், வேட்டைப் பொருளான பவுலாகியிருந்தார்!

அவர்கள் அங்கு வந்த பிறகு, "மக்களைத் தம் வசப்படுத்திக் கொண்டார்கள்" என்று வசனம் 19ல் குறிப்பிடப்பட்டுள்ளது.[20] அவர்களின் பொய்களும், பாதி உண்மைகளும் பின்வரும் விதமாய்ச் சென்றிருக்கலாம் என்று மெக்கார்வி அவர்கள் ஆலோசனை கூறுகின்றார்:

> எங்கள் நாட்டு மனிதர்கள் இரண்டு பேரை நீங்கள் மனித உருவில் வந்துள்ள தேவர்கள் என்று கருதுவதை நாங்கள் புரிந்து கொண்டோம். அவர்கள் யார் என்பதை எங்களால் கூற முடியும். அவர்கள் அந்தியோகியாவுக்கு வந்த யூதர்கள் ஆவார்கள், அங்கு அவர்கள் இழிவாகச் செயல்பட்டு ... பட்டணத்தில் இருந்த தங்கள் சகயூதர்கள் அருவருப்படையும்படி செய்து, கனம்பொருந்திய ஸ்திரீகள் மற்றும் பட்டணத்து முதலாளிகள் ஆகியோர் எழும்பி இவர்களைத் துரத்தி விட இவர்களே காரணமாகினர். பிறகு இவர்கள் இக்கோனியாவுக்குச் சென்றார்கள், அங்கு பட்டணத்து அதிகாரிகள் முன்பாக விஷப் பூச்சிகள் போல இவர்கள் காணப்பட்டதால், யூதர் மற்றும் புறஜாதியர் ஆகியோரின் ஒன்றுசேர்ந்த உதவியினால் இவர்களைக் கல்லெறியத் தயாரானபோது, திருடர்கள் போல ஓடி வந்து இப்படியாக லீஸ்திராவுக்கு வந்தார்கள். எங்கள்

நாட்டையும், பெயரையும் இவர்கள் அவமானப்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை, உங்கள் அனுமதியுடன் இந்த மாயவித்தைக்கு ஒரு முடிவு கட்டுவோம்; ஏனென்றால் இவர்கள் அசுத்த ஆவியின் துணை கொண்டுதான் மக்களுக்குள் அற்புதம் செய்கின்றார்கள்.

மூட நம்பிக்கை மிக்க மக்களின் மத்தியில் மேற்கண்டதில் கடைசியில் உள்ள விவாதமானது மாபெரும் விளைவை உண்டாக்கியிருக்கும். லீஸ்திராவின் குடிமக்கள் தங்கள் பட்டணத்திற்குத் தேவர்கள் வந்திருந்ததாக நினைத்தபோது, அவர்கள் அதிகம் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆயினும், அசுத்த ஆவிகள் தங்கள் பட்டணத்திற்கு வந்தார்கள் என்ற எண்ண மானது அவர்களின் மனதைப் பயங்கரத்தினால் நிறைத்திருந் திருக்கும்.

கூட்டத்தினரின் இரக்கத்தைச் சம்பாதித்துக் கொண்ட கிளர்ச்சிக்காரர்கள் பவுலைத் தேடினார்கள். லீஸ்திராவின் மக்கள், மனதில் பதியும் தோற்றம் கொண்ட பர்னபாவே மிகவும் முக்கியமானவரென்று நினைத்தார்கள், ஆனால் அந்தியோகியா மற்றும் இக்கோனியாவிலிருந்து வந்த யூதர்கள், பவுல்தான் தங்கள் விசுவாசத்திற்குப் பெருத்த அபாயத்தை உண்டு பண்ணுபவர் என்பதை அறிந்திருந்தார்கள். இதற்கு முன்பு ஒருமுறை அவர்கள் அவரைக் கல்லெறிய முயற்சி செய்திருந்தார்கள், ஆனால் அவர் அவர்களின் விரல்களிலிருந்து நழுவி விட்டார் (14:5, 6). இம்முறை அவர்கள், ஒருவேளை அவர் சந்தைப் பகுதியில் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது, அவரை திகைப்படையச் செய்திருக்க வேண்டும். அவர்கள் அவரை விரைவாகச் சூழ்ந்து கொள்ளுகையில் கூர்மையான கற்கள் பறக்கத் தொடங்கியதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. (கல்லெறிதல் என்பது அடிப்படையில் யூதர்களின் தண்டனை முறைமையாய் இருந்ததால், இந்தக் கும்பலின் செயல்பாட்டில் யூதர்களே முன்னோடிகளாயிருந்து செயல் பட்டிருக்க வேண்டும். ஆயினும், ஸ்தேவானைக் கல்லெறிகை யில் செய்தது போல [7:58], பவுலைக் கல்லெறிகையில் நகருக்குப் புறம்பே கொண்டு செல்ல வேண்டும் என்ற யூதர்களின் சட்ட முறைமையின் சீர்மைத்தன்மையை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை என்பதைக் கவனியுங்கள். [ஒருவேளை எருசலேம் யூதர்களின் பட்டணம் என்பதால் அதன்

*பரிசுத்தத்தைக் காப்பதற்காக ஸ்தேவானை எருசலேமுக்கு வெளியே கொண்டு போனார்கள் என்றும், லீஸ்திரா புறஜாதிப் பட்டணமானபடியினால் யூதர்களை பொறுத்த மட்டில் அது முழுவதும் தீட்டுள்ள பட்டணம் என்பதால் வெளியே கொண்டு போவது பற்றி அவர்கள் அதிகமாய் அக்கறை செலுத்தவில்லை என்றும் கூறலாம்-மொழிபெயர்ப்பாளர்].)*

*கற்கள், பவுலின் தசையைக் கிழித்து, எலும்புகளை நொறுக்கிய போது பவுலின் எண்ணங்கள் என்னவாய் இருந்திருக்கும்? அநேக ஆண்டுகளுக்கு முன்னதாக நடைபெற்ற இதே போன்றதொரு நிகழ்ச்சி அவரின் நினைவுக்கு வந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அது ஸ்தேவானுடைய உடலிலிருந்து உயிரானது கசக்கி பிழியப்படுவதை அவர் கவனித்துக் கொண்டிருந்த காட்சியே ஆகும். ஒருவேளை அவர், "நான் இவ்விதம் மரிக்க வேண்டும் என்பது எவ்வளவு முரண்பாடானது - எவ்வளவு தகுதியானது" என்று கூட நினைத்திருந்திருப்பார்.*

*கடைசியில், பவுலின் நொறுங்கிய உடலானது இன்னமும் ஒரு இரத்தக்குட்டையில் கிடந்தது. மனிதர்கள் அந்த அப்போஸ்தலரின் நொண்டியான கைகளையும், கால்களையும் பற்றிப் பிடித்து அவரது உடலை கரடுமுரடான பாதை மேடையில் தூசி மற்றும் அழுக்கினூடே பட்டணத்தின் வெளியில் இருந்த ஓரிடம் வரைக்கும் இழுத்துச் சென்றார்கள், அங்கு அவரது உடலை கழுகுகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் தயாரான விருந்தாக அவர்கள் போட்டு விட்டுச் சென்றார்கள். வசனம் 19ன் முடிவில், "அவர்கள் பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப் போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியே இழுத்துக் கொண்டு போனார்கள்'' என்று கூறப்படுகின்றது.*

*உங்களில் சிலர் பவுலைப் போன்ற நிலையில் இருக்கக் கூடும். நீங்கள் கூட மக்களில் சிலர் தங்கள் மனதை மற்றவர்கள் வந்து கெடுத்துப்போடும் வரையிலும் உங்களை வணங்கிக் கொண்டும், அதன் பிறகு உங்களை - ஒருவேளை சரீரப்பிரகாரமாகவோ, ஒருவேளை உணர்வுப் பூர்வமாகவோ - வதைக்கும் மக்களை அறிந்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் உங்களைத் தங்கள் வாழ்வில் இருந்தே "வெளியே இழுத்துச் சென்று," "மரித்துப் போன" நிலையில் உங்களை விட்டுச் சென்றிருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையை ஒருவர் எப்படி*

*கையாளுகின்றார்? நாம் தொடர்ந்து படிக்கையில், பவுல் தாம் வதைக்கப்பட்ட நிலையை எப்படிக் கையாண்டார் என்ற குறிப்புகளை நீங்கள் காணுங்கள்.*

*சற்று நேரம் கழித்து லீஸ்திராவில் இருந்த புதிய கிறிஸ்த வர்கள் ஜாக்கிரதையுடன் பட்டணத்தை விட்டு வெளியே வந்து பவுலின் சரீரத்தைச் சுற்றி நின்றார்கள்.*[21] *வசனம் எளிமை யாக, "சீஷர்கள் அவனைச் சூழ்ந்து நிற்கையில்" (வ. 20அ) என்று கூறுகின்றது. அவர்களின் வருத்தத்தையும், நிச்சயமற்ற தன்மை யையும் கற்பனை செய்வது கடினமல்ல. சீஷர்களின் பெயர் களை லூக்கா குறிப்பிடவில்லை, ஆனால் அவர்களில், தீமோத் தேயுவின் பாட்டியாகிய லோவிசாளும், தாயாகிய ஐனிக்கேயா ளும், இளைஞனான தீமோத்தேயுவும் இருந்திருப்பார்கள்.*[22] *பின்னாளில் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, "நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம் பண்ணி ... உன்னைக் காண வாஞ்சையாயிருந்து" (2 தீமோ. 1:3, 4) என்று கூறினார். ஒருவேளை அந்த இளம் பையன் (அந்த இளைஞனுக்கு அப்போது பதினைந்து வயதிருக்கலாம் என்று* McGarvey *அவர்கள் மதிப்பிட்டுள்ளார்). தனது ஆவிக்குரிய நாயகனின் (முன்னோடியின்) சிதைந்த நொறுங்கிய உடலினருகே சிந்திய கண்ணீரை அவர் குறிப்பிட்டிருக்கலாம். அந்தப் பட்டணத்து மக்களைப் போலவே, சீஷர்களும் கூட பவுல் மரித்துப் போனார் என்று நினைத்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.*

*பவுல் உண்மையிலேயே மரித்துப் போயிருந்தாரா, கர்த்தர் அவருக்கு மறுபடியும் உயிர் கொடுத்தாரா? நாம் அதை அறிவதில்லை. சிலர், இவ்வேளையில்தான் பவுல், "மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டார்" (2 கொரி. 12:2) என்று நினைக்கின்றார்கள். இது உயிர்த்தெழுதலாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், இவ்வரலாறு தேவனுடைய வல்லமையால் நிறைந்ததாக இருக்கின்றது. மரணத்தின் வாசலில் இருந்த இம்மனிதர், மறுநாளிலேயே அறுபது மைல் பிரயாணம் ஒன்றைத் தொடங்கினார்!*

*உயிர்ப்பிக்கப்பட்ட பிறகு, பவுல் என்ன செய்தார்? வசனம் 20, "... அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித் தான் ..."*[23] *என்ற கூறுகின்றது. பட்டணத்திற்குள்ளா? அவரது*

பகைவர்கள் அங்குதானே இருந்தார்கள்! அங்குதானே அவரது வாழ்க்கையை முடிக்கச் சில மனிதர்கள் திட்டமிட்டார்கள்! ஒரு வேளை தமது எதிரிகளிடம் நிரூபிக்கச் சில விஷயங்கள் மற்றும் புதிய கிறிஸ்தவர்களுக்கு விளக்கப்படுத்தச் சில விஷயங்கள் பவுலிடம் இருந்திருக்கலாம். பின்னாளில் பவுல் தீமோத்தேயுவுக்குப் பின்வருமாறு எழுதினார்:

> தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல், தேவவல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி (2 தீமோ. 1:7, 8).

தீமோத்தேயுவுக்கு இவைகள் வெறும் வார்த்தைகளாயிருக்கவில்லை. இவைகள் பவுலின் வாழ்க்கையில் அதிகாரப்பூர்வமாயிருந்ததைத் தீமோத்தேயு கண்டிருந்தார்.

மீண்டும் ஒரு முறை சீஷர்களின் பதில்செயலைக் கற்பனை செய்வது கடினமல்ல. இரவு முழுவதும் அன்புக் கரங்கள் பவுலுக்குப் பணிவிடை செய்து, காயங்களைக் கழுவிக் கட்டியபோது, ஆறுதல் அளிக்கும் குரல்கள் அவருக்கு உற்சாகம் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அடுத்த நாள் காலையில், தமது சகோதரர்களாலும், தேவனாலும் பெலப்படுத்தப்பட்ட பவுல், பர்னபாவுடன் சேர்ந்து தென்கிழக்கு முகமாய் தெர்பை என்ற ஒரு சிறு பட்டணத்தை நோக்கித் தமது நீண்ட பயணத்தைத் தொடங்கினார் (வ. 20இ).

நாம் நமது பாடத்தை முடிப்பதற்கு முன்னர், பவுல் வதைக்கப்பட்டபோது செய்தவைகள், செய்யாதவைகள் ஆகியவை பற்றி சற்றுக் காண்போம்: முதலாவது, மற்றவர்கள் அவரை வணங்கியபோது அவர் கர்வம் தன்னை மேற்கொள்வதை அனுமதிக்கவில்லையோ அது போலவே அவர் வதைக்கப்பட்டபோது, கசப்புணர்வு தன்னை மேற்கொள்ளும்படி அனுமதிக்கவில்லை. இரண்டாவது, அவர் தம்மை வதைத்தவர்களை உடனடியாக எதிர்கொண்டார். மூன்றாவது, அவர் தமது சகோதரர்களை நம்பியிருந்தார்; அவர்களுடன் அவர் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். நான்காவது, அவர் உயிர் விட

நேர்ந்தாலும் ஊழியத்தில் உறுதியாயிருந்தார். தாம் செய்யும் படி தேவன் ஒப்புவித்திருந்த ஊழியத்தை அவர் தொடர்ந்து செய்தார். ஐந்தாவது, அவர் வதைக்கப்பட்டபோது அதைத் தமது சொந்த பெலத்தினால் கையாள விரும்பாமல், தேவனை அவர் நம்பியிருந்தார். பின்னாளில் அவர், "... லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் ... இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கி விட்டார்" (2 தீமோ. 3:11). வதைக்கப் படுகிறவர்களுக்கும், தவறாகப் பயன்படுத்தப்படுகின்றவர் களுக்கும் இவ்விடத்தில் பாடங்கள் காணப்படுகின்றன.

## முடிவுரை

பவுல் தாம் வணங்கப்பட்ட போதும், வதைக்கப்பட்ட போதும் அவைகளைக் கையாண்ட முறையின் "இரகசியம்" பற்றியோ - மற்றும் உங்கள் வாழ்வு உங்களுக்குக் கொண்டு வரும் நல்லது கெட்டது ஆகியவற்றை நீங்கள் எவ்விதம் கையாள முடியும் என்பது பற்றியோ இன்னும் நான் சற்றும் தொடங்கவில்லை. பவுல் லீஸ்திராவிலும், கலாத்தியாவின் மற்ற பட்டணங்களிலும் கூடி வந்த சபைகளுக்கு எழுதுகையில் இந்த இரகசியத்தைக் கொடுத்தார் என்று நான் நம்புகின்றேன்: "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா. 2:20). பவுல் மரித்திருந்தார்; கிறிஸ்து அவருக்குள் வாழ்ந்திருந்தார்! மரித்துப் போன மனிதர் ஒருவரை நீங்கள் புகழ்ந்து, அவரைப் பாராட்டினால் நிறைக்க முடியாது; மரித்துப்போன ஒரு மனிதரை வதைத்து, அவரது சுய கௌரவத்தை இழந்து போகப் பண்ண உங்களால் முடியாது.

நாம் தகுதியற்றவர்களாய் இருக்கும்போது, புகழப் படுவதும் காரணமில்லாமலேயே வதைக்கப்படுவதும் பெரும் பாலும் நடக்கின்றது என்பது எனது அனுபவமாகும். இப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் பற்றி நான் அக்கறைப்படுவதில்லை

(அவை யாவும் சமமாகி விடுகின்றன என்று நான் கணக்கிடுகின்றேன்). இருப்பினும், பாராட்டிற்கும் நம்பிக்கையின்மைக்கும் இடையில் நீங்கள் தொடர்ந்து அசைவாடிக் கொண்டிருக்கக் கண்டால், ஒரு அட்டையில் கலாத்தியர் 2:20ஐ எழுதி அதை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். பவுலின் தத்துவமானது உங்கள் சிந்தனையின் ஒரு பாகமாகும் வரையிலும் ஒவ்வொரு நாளும் பல முறைகள் அதை எடுத்துப் படியுங்கள்.

தேவனுடைய சித்தத்தைச் செய்வதில்தான் உண்மையான வெற்றி அடங்கியுள்ளது என்பதையும், அவருடனான நமது உறவில்தான் உண்மையான மதிப்பு அடங்கியுள்ளது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள தேவன் நமக்கு உதவுவாராக. அவருடைய பலத்தின் மூலமாக நாம், வணங்கப்படுகையிலும், வதைக்கப்படுகையிலும் பாதிக்கப்படாமல் நிலைத்திருப்போம்.

## காட்சி-உதவிக் குறிப்புகள்

நீங்கள் வாழும் பகுதியில் மலர் அலங்காரக் கலைஞர்கள் தங்கள் சின்னமாக ஹெர்மெஸ்/மெர்கூரியை (தங்கள் சேவையில் துரிதத்தை வலியுறுத்துவதற்கு) ப் பயன்படுத்தினால், அவர்களின் விளம்பரங்களில் ஒன்றை நீங்கள் "தேவர்களுடைய செய்தியாளர்கள்" என்று ஹெர்மெஸ்/மெர்கூரியைப் பற்றிப் பேசும் போது பயன்படுத்தலாம்.

---

குறிப்புகள்

[1]இரு நிகழ்ச்சிகளிலும் ஒற்றுமை இருப்பதினால், இவை இரண்டும் ஒரே நிகழ்ச்சிதான் என்றும், பேதுருவுக்கு இருந்த அதே வல்லமை பவுலுக்கும் இருந்தது என்று தோன்றப் பண்ணுவதற்காக லூக்கா முன் நடந்த நிகழ்ச்சியைத் தழுவி எழுதினார் என்றும் சிலர் யூகிக்கின்றார்கள். ஆயினும், இரு நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டு நோக்கினால் ஒற்றுமைகளைக் காட்டிலும் வேற்றுமைகளே அதிகமாகக் காணப்படும். பவுலின் வல்லமைகளைப் பேதுருவின் வல்லமைகளோடு ஒப்பிட்டுக் காட்டுவது லூக்காவின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது என்பது உண்மையே, ஆனாலும் கற்பனைகளை வைத்து அல்ல, உண்மை நிகழ்ச்சிகளை வைத்தே அவர் அந்த நோக்கத்தை நிறைவேற்றினார். [2]பவுல் அம்மனிதனின் இருதயத்தின் உள்ளாக

அற்புத விதமாகப் பார்த்தாரா அல்லது அந்த சப்பாணியின் முகத்தில் நம்பிக்கையின் பார்வையிருந்ததைப் பார்த்தாரா என்று லூக்கா கூறவில்லை. [3]KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில் யூப்பித்தர் என்றுள்ளது. இது ஜீயஸ் என்பதற்கான இலத்தீன் பெயராகும். இருப்பினும் கிரேக்க வசனத்தில் "யூப்பித்தர்" என்றில்லாமல் "ஜீயஸ்" என்றுதான் உள்ளது. லீஸ்திராவில் இருந்த மக்கள் ஜீயஸையும், ஹெர்மஸையும் அவர்களின் இலத்தீன் பெயர்களைப் பயன்படுத்தாமல், கிரேக்கப் பெயர்களைப் பயன்படுத்தியே வணங்கினார்கள் என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர். [4]ஹெர்மெஸ் (அல்லது மெர்க்கூரி) என்பவன் தேவர்களின் செய்திகளை வேகமாய் எடுத்துச் செல்பவன் எனக் கருதப்பட்டதால், பொதுவாக அவன் கால்களில் சிறகுகளுடன் சித்தரிக்கப்படுவான். ஹெர்மெஸ் "தேவர்களின் விளக்கவுரையாளன்" என்றும் கருதப்பட்டான், அதாவது தேவர்கள் சொன்னதின் அர்த்தம் என்னவென்று அவனால் மனிதர்களுக்குச் சொல்ல முடியும் என்று கருதப்பட்டது. "Hermeneutics" என்பது "விளக்கவுரையறிவியலாக" உள்ளது (வழக்கமாக வேத வசனங்களை விளக்கும் முறையைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது). [5]இது போன்ற கோவில் ஒன்றின் இடிந்த சிதிலங்கள் பழங்கால லீஸ்திரா இருந்த இடத்தில் உள்ள நகரம் ஒன்றிற்கு வெளியே காணப்பட்டுள்ளது, இது அப்பகுதியில் வழக்கில் இருந்த நடைமுறையைக் குறிக்கின்றது. [6]"வாசல்" என்பது பட்டணத்தின் வாசலோ, கோவிலின் வாசலோ அல்லது பவுலும் பர்னபாவும் தங்கியிருந்த வீட்டு வாசலோ என்பதை நாம் அறியவில்லை. [7]எனது பயணங்களில், பழங்காலச் சிலை வணக்கப் பீடங்களில் கழுத்தில் மாலைகளுடன் எருதுகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளதை நான் கண்டுள்ளேன். [8]வசனம் 4ல் போலவே இவ்விடத்திலும் "அப்போஸ்தலர்" என்ற வார்த்தையானது பவுலும் பர்னபாவும் அந்தியோகியா சபையாரால் அனுப்பப் பட்டதைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. 14ம் அதிகாரத்தில் காணப்படும் இவ்விரண்டு குறிப்புகளில் மட்டுமே பன்னிருவரல்லாதவர்களைக் குறிப்பிட லூக்கா "அப்போஸ்தலர்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். [9]அப். 13:13க்குப் பிறகு (அதாவது "பவுலும் அவனோடு கூட இருந்தவர்களும்" என்று குறிப்பிட்ட பிறகு) மறுபடியும் லூக்கா பர்னபாவைக் கிரேக்கர்களின் முதன்மைத் தெய்வமான ஜீயஸ் என்று குறிப்பிட்டதே இதற்குக் காரணம் என்பது தெளிவு. [10]இதுவே நடந்தது என்று அநேக விளக்கவுரையாளர்கள் கருதுகின்றனர், லூக்கா அங்கிருந்த மக்கள் லிக்கவோனிய மொழியைப் பேசினார்கள் என்று குறிப்பிடக் காரணமும் இதுவேயாகும். ஆயினும் மற்ற காரணங்களுக்காகவும் லூக்கா இதைக் குறிப்பிட்டிருக்கலாம். பவுல் அந்நிய பாஷைகள் பேசும் வரத்துடன் (1 கொரி. 14:18) எந்த மொழியையும் புரிந்து கொள்ளத் தக்கதாக, பாஷைகளுக்கு வியாக்கியானம் பண்ணும் வரத்தையும் பெற்றிருந்திருப்பார் என்று நான் எண்ணுகின்றேன்.

[11]இப்பழக்கமானது யாக்கோபு வரைக்கும் பின் காணப்படுகின்றது (ஆதி. 37:29-34). இதே வழிமுறையில் மத்தேயு 26:65ல் கேலி செய்யும் பயவுணர்வு வெளிப்படுத்தப்பட்டது. [12]அப். 10:26ஐக் காணவும். [13]"வீணான தேவர்கள்" என்பது பழைய ஏற்பாட்டில் விக்கிரகங்களைக் குறிப்பிடும் பொதுவான ஒரு வழி முறையாகும் (சங். 31:6; யோனா 2:8). ஆங்கிலத்தில் "vain" என்றால் "வெறுமையான" அல்லது "மதிப்பற்ற" என்று அர்த்தப்படும். NIVயில் "these worthless things" என்றுள்ளது. விக்கிரகங்களைக் கண்டனம் பண்ணும் சிறந்த வகையொன்றை ஏசாயா 44:9-20ல் காணவும். [14]அப். 17:26 ஐக் காணவும். [15]1 தெச. 1:9. [16]அப். 3:20 ஐக் காணவும். [17]"We are bringing you good news" (NIV) என்பது அநேகமாக இவ்விடத்தில் சிறந்த மொழிபெயர்ப்பாகும் (RSV யிலும் காணவும்). அந்த நேரத்தில் "நற்செய்தி" என்பது அவர்கள் மரித்த தேவர்களை விட்டு,

*ஜீவனுள்ள தேவனைத் தொழுது கொள்ளத் திரும்புவதாகவே இருக்கும். அதன் பிறகு பவுல் அவர்களுக்கு இயேசுவைப் பற்றிய "நற்செய்தியை" பிரசங்கித்திருக்க முடியும். [18]இன்றைக்கான சத்தியம் பத்திரிகையைப் பெறுகின்ற நீங்களும் கூட வேதாகமத்தை அறியாத மக்களின் மத்தியில் சத்தியத்தைப் பிரசங்கிக்கும்போது இயற்கை வெளிப்பாட்டிலிருந்தே தொடங்கிப் போதிக்க வேண்டும். [19]இந்த யூதர்கள் இக்கோனியா மற்றும் அந்தியோகியாவில் இருந்து தானியம் வாங்குவதற்காக லீஸ்திராவுக்கு வந்தவர்கள் என்றும், அவர்கள் பவுலும், பர்னபாவும் அங்கிருப்பதைத் தற்செயலாக அறிந்தார்கள் என்றும் சிலர் யூகிக்கின்றார்கள். இந்த யூதர்கள் பவுலுக்கும், பர்னபாவுக்கும் தொல்லை கொடுக்கவே வந்தார்கள் என்ற கருத்தையே லூக்கா வலியுறுத்துகின்றார். இதே சூழ்நிலையை நாம் பின்னால் அப். 17:13ல் காண்போம். [20]இயேசுவின் வாழ்க்கையில் அவரை வணங்கிப் பின் விரைவிலேயே அவரை தூஷித்த கூட்டம் பற்றிய அநேக இணை நிகழ்ச்சிகளை நாம் காண முடியும் (எ. கா. லூக். 4:22, 28). ஞாயிறன்று "ஓசன்னா" என்று கூவியவர்கள் வெள்ளியன்று "அவனைச் சிலுவையில் அறையும்" என்று கத்தியது மிகச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இந்த நிகழ்ச்சிகள் யாத். 23:2ன் எச்சரிக்கையினுடைய அவசியத்தை விளக்கப்படுத்துகின்றன.*

*[21]ஒருவேளை பர்னபா அவர்களுடன் இருந்திருப்பார். [22]பவுலே, தீமோத்தேயுவை மனமாற்றினார் என்பது தெளிவு (1 தீமோ. 1:2). பவுல் தமது இரண்டாவது நற்செய்திப் பயணத்தில் லீஸ்திரா வந்தபோது (16:1, 2) அங்கு தீமோத்தேயு ஏற்கனவே ஒரு பிரசங்கியாராக அங்கீகரிக்கப்பட்டிருந்ததால், பவுல் தமது முதலாம் நற்செய்திப் பிரயாணத்திலே தீமோத்தேயுவை மனமாற்றமடையச் செய்திருக்க வேண்டும். அநேகமாக அதே வேளையில் தீமோத்தேயுவின் தாய் மற்றும் பாட்டி ஆகியோரையும் மனமாற்றமடையச் செய்திருக்க வேண்டும். [23]மேற்கத்திய வசன பாடத்தில் (ரோமிலும் அதைச் சுற்றிலும் இரண்டு முதல் நான்காம் நூற்றாண்டு வரையிலும் பயன்படுத்தப்பட்ட வேதவசன மொழி பெயர்ப்பு) பவுல் மாலையில் பட்டணத்திற்குள் சென்றதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.*

## "சுவிசேஷ ஊழியத்தின் அதிகாரம்?"

*அப். 14:23ல் பவுலும் பர்னபாவும் கலாத்தியாவில் இருந்த சபைகளில் "மூப்பர்களை" நியமித்தார்கள். "தேவன் நிறைவேற்றின சகல விஷயங்கள்" என்ற பாடத்தில் குறிப்பிட்ட படி இது முன்னோடிகளை தேர்ந்தெடுப்பதற்காக அல்ல, ஆனால், அவர்களை நியமிப்பதற்காக நடைபெற்ற ஆராதனை யாயிருந்திருக்கும். நாம் பெற்றுள்ள வரையறைக்குட்பட்ட தகவலில் இருந்து, புதிய முன்னோடிகளை ஏற்படுத்துவதில் சுவிசேஷகர்கள் (பிரசங்கியார்கள்) தலைமைப் பங்கை வகித்தார்கள் என்று காணப்படுகின்றது (அப். 6:6; 14:23; 1 தீமோ. 5:22; தீத்து 1:5). ஆகையால் சுவிசேஷகர்கள் தாங்கள் நியமித்த மூப்பர்களின் மேல் அதிகாரமுள்ளவர்கள் என்று சிலர் முடிவு செய்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட முடிவுக்கு ஆதாரம் எதுவும் கிடையாது. புதிய ஜனாதிபதியையோ அல்லது ஆளுநரையோ பதவிப்பிரமாணம் செய்விக்கும் அரசு அதிகாரி அதன் மூலமாக, அந்த ஜனாதிபதியின் மீதோ அல்லது ஆளுநரின் மீதோ அதிகாரம் பெறுவதில்லை. அப். 20:28 ஐப் படிக்கையில் நாம் காணப்போகின்றபடி - சுவிசேஷகர்களல்ல - மூப்பர்களே மந்தையின் மீது (சபையின் மீது) அதிகாரமுள்ள வர்களாவார்கள். சபையின் மற்ற எல்லா உறுப்பினர்களையும் போலவே பிரசங்கிக்கும் மனிதரும் மூப்பர்களுக்குக் கடமைப் பட்டவராவார். சுவிசேஷகரின் ஒரே "அதிகாரம்" என்பது "வசனத்தைப் பிரசங்கிப்பது" மட்டுமே ஆகும் (2 தீமோ. 4:2).*